# தென்னிந்திய தமிழ் திருச்சபை - அல்யென்

## CSI Tamil Parish Alain, UAE

# மன்னா..

எங்கள் ஆண்டவராகிய
கர்த்தாவே,
உம்முடைய நாமம்
பூமியெங்கும் எவ்வளவு
மேன்மையுள்ளதாயிருக்கிறது.



சங்கீதம்/ Psalm 8:9

பொழிவு: 13
ஆகாரம்: 07

July '2021

தென்னிந்திய தமிழ் திருச்சபை அல்யெய்ன்

# C.S.I. TAMIL PARISH ALAIN, UAE

| REGULAR SERVICE | BIBLE STUDY | CHILDRENS BIBILE SCHOOL |
|---|---|---|
| FRIDAY'S<br>6:30 PM – 7:30 PM<br>CHURCH<br>MAIN HALL<br><br>EVANGELICAL CHURCH CENTRE,<br>KENAD HOSPITAL CAMPUS,<br>ALAIN, UAE | WEDNESDAY'S<br>7:30 PM – 8:30 PM<br>ONLINE<br>zoom<br>CONT: REV. S. P. BASKAR<br>056 7668 343 |  |
| **MEN'S FELLOWSHIP** | **WOMEN'S FELLOWSHIP** | **YOUTH FELLOWSHIP** |
| 2'ND THURSDAY<br>7:30 PM – 9:00PM<br>ONLINE<br>zoom<br>CONT: MR. ASHOK KUMAR<br>050 842 9659 | 3'RD THURSDAY<br>7:30 PM – 9:00PM<br>ONLINE<br>zoom<br>CONT: MRS. SHALY MELBIN<br>056 394 1817 | 4'TH THURSDAY<br>7:30 PM – 9:00PM<br>ONLINE<br>zoom<br>CONT: MR. SANTHOSH KUMAR<br>056 875 2723 |

## OTHER MEETINGS – VIA ZOOM

MONTHLY FASTING PRAYER: $1^{ST}$ FRIDAY 11:AM TO 1:00PM

MONTH END/NEW MONTH STARTING PRAYER: (LAST DAY OF MONTH) 11:30 PM TO 12:30 PM

FOR MINISTRY DETAILS & ENQUIRES – PLEASE CONTACT

REV. S.P. BASKAR, THE PRESBYTER
CSI TAMIL PARISH ALAIN, UAE
TEL: +971 (3) 766 8353 | MOB: 056 766 8343
**Email: csitcalain@gmail.com** | **Web: csitamilparishalain.org**

# சபை போதகரிடமிருந்து...



கிறிஸ்துவுக்குள் அன்பான இறை மக்களே!

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் உங்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள்! ஸ்தோத்திரம்!!

..மனுஷனே, நன்மை இன்னதென்று அவர் உனக்கு அறிவித்திருக்கிறார்; நியாயஞ்செய்து, இரக்கத்தைச் சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல், வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்...-மீகா:6:8.

**He has shown you, O man, what is good;**
**and what does the Lord require of you but to do justly, to love mercy,**
**and to walk humbly with your God? - Micah 6:8**

மீகா இறைவாக்கினர் கடவுளுக்கு எப்படி பிரியமாய் இருக்க வேண்டும் என்பதை சுட்டிக் காட்டுகிறார்... கடவுள் விரும்புகின்ற வாழ்வு என்பது...

- நேர்மையை கடைப்பிடித்து வாழ்வது...
- இரக்கம் கொண்டு வாழ்வது...
- உண்மையை, நீதியை கடைப்பிடித்து வாழ்வது...

இப்படிப்பட்ட வாழ்வை நாம் பெற்றுக்கொள்ள நம்மை ஒப்புக்கொடுக்க அழைக்கப்படுகிறோம்...

கடந்த காலம் முழுவதும் நம்மை வழிநடத்தி, பாதுகாத்து வருகின்ற நமது ஆண்டவரை உங்களுடன் இணைந்து உள்ளத்தின் ஆழத்தில் இருந்து துதிக்கின்றேன்... தொடர்ந்து இந்த கோவிட்'19 காலக்கட்டத்தில் இந்த தேசத்தில்

நம்மை பாதுகாத்து வழி நடத்தி வருகின்ற ஆண்டவருக்கு நன்றி செலுத்துவோம். தொடர்ந்து அநேகர் இந்த காலகட்டத்தில் இந்த தொற்றுநோயின் மூலமாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், பொருளாதாரத்தில் மிகவும் கஷ்டப்படுகிற குடும்பங்களுக்காக ஜெபிக்க அழைக்கப்படுகிறோம்..

தொடர்ந்து நமது திருச்சபையில் **Zoom** வழியாக நடைபெறும் அனைத்து கூடுகைகள் மற்றும் ஆராதனைகளில் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். இந்த கோவிட்-19 காலங்களில் நமது விசுவாச வாழ்வில் சோர்ந்து போகாமல் ஆண்டவருக்குள் நிலைத்திருக்கவும் தேசங்களுக்காக, திருச்சபை களுக்காக, ஊழியங்களுக்காக, குறிப்பாக அமீரகத்தில் உள்ள மக்களுக்காக, அவர்களின் குடும்பங்களுக்காக, பாதுகாப்பிற்காக, வேலை வாய்ப்புகளுக்காக, பொருளாதாரத்திற்காக, நமது திருச்சபையின் குடும்பங்களுக்காக, நமது பிள்ளைகளின் கல்விற்க்காக, அவர்களின் எதிர்காலத்திற்காக... அத்துடன் அவர்களின் ஆவிக்குரிய வாழ்விற்காக இந்த விடுமுறை காலங்களில் நமது திருச்சபையின் வழியாக ஒழுங்கு செய்துள்ள **Proverbs Challenge-2021** என்ற நிகழ்விற்காகவும், நமது பிள்ளைகளுக்காகவும் ஜெபிக்க அழைக்கப்படுகிறோம். மேலும் இந்த கொரோனா இரண்டாம் அலை மிகவும் பயத்தை ஏற்படுத்துகின்றது. இதிலிருந்து விடுவிக்கப்பட ஊக்கமாய் ஜெபிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்....

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

ஆண்டவரின் உன்னத பணியில் உங்கள் ஆயர்....

*Rev. S. P. Baskar*

**DOWNLOAD OUR MONTHLY MANNA BY VISITING OUR CHURCH WEBSITE.**
**WE REQUEST YOU TO READ AND PARTICIPATE.**

**http://www.csitamilparishalain.org**

**மேற்குறிப்பிட்டுள்ள திருச்சபையின் இணையத்தளத்தை பயன்படுத்தி மாதாந்திர மன்னாவை நீங்கள் பதிவிறக்கம் செய்து; படித்து, பயன்பெற பங்குபெற அன்புடன் அழைக்கிறோம்**




## எங்கள் ஆண்டவராகிய கர்த்தாவே, உன்னுடைய நாமம் பூமியெங்கும் எவ்வளவு மேன்மையுள்ளதாயிருக்கிறது. சங்கீதம் 8:9

## O Lord, our Lord, how majestic is your name in all the earth. – Psalm 8:9

### முன்னுரை

**சங்கீதம்:8** இறைவனை (அ) கடவுளை புகழ்ந்து பாடும் பாடலாகும்... 1969-ஆம் ஆண்டு ஜூலை மாதம் அருட்தந்தை ஆறாம் பால் அமெரிக்க விண்வெளி வீரர் "ஆம்ஸ்திராங்கு ஆல்திரின்" மூலமாக இந்த சங்கீதத்தை சந்திரனில் வைக்கச் செய்தார், ஏனெனில் இந்த சங்கீதம் ஆண்டவரின் பராமரிப்பினால் மனிதர் அடைந்துள்ள உயர் நிலையைப் பற்றி பாடுகிறது. இயற்கையும், மனித குலமும் ஆண்டவரின் மேன்மையை வெளிப்படுத்துகின்றன. விண்ணும் மண்ணும் அவரது மாட்சியை எடுத்துரைக்கின்றன. கூடாரத் திருவிழாவின்போது ஆண்டவரது திருமுன் இந்த பாடல் பாடப்பட்டது. படைப்பிற்கும், பாதுகாப்பிற்கும் காரணமாகிய ஆண்டவர் மனித குலத்தை அவர் படைத்த படைப்புகளுக்கு சிகரமாக வைத்தார் (ஆதி: 1:26-28) எனவே இறைவன் மேன்மைப்படுத்தப் படுகிறார், மனிதனும் மாட்சியை பெறுகின்றனர் என்பதை இந்த சங்கீதம் நமக்கு வெளிப்படுத்துகிறது...

**Psalm :8 This hymn of praise helps the Lord's people celebrate their glorious Creator, and their privileged place in his creation With Genesis1:2 as a background, the Psalm presents mankind as the object of God's special attention. At the same time the mention of "foes" "enemy" and "avenger"(Ps 8:2) reminds readers of Genesis :3- and God's plan for fallen mankind Israel was to be the first fruits of restored humanity. Ps:8:4-6-Jesus as David king is the ideal Israelite, and thus the ideal human being. He is crowned with glory and honour after his suffering on behalf of mankind....**

### *சங்கீதம் 8:1-6: இறைவனின் மேன்மை

**வசனம்:1** எங்கள் ஆண்டவராகிய கர்த்தாவே... உம்முடைய மகத்துவத்தை வானங்களுக்கு மேலாக வைத்தீர்...

இஸ்ரவேலரின் புவியியற் கருத்துப்படி விண்ணகம் என்பது கீழ் வான்வெளி, மேல் வான்வெளி என்ற இரண்டு அமைப்புகளைக் கொண்டது. இரண்டுக்குமிடையே மேற்ககடல் இருந்தது இவைகளில் இரண்டிற்கும் மேலே இறைவன் உறைவிடம் இருந்தது. எனவே"வானங்களுக்கு மேலாக" என்று பன்மையில் கூறி இறைவனின் இருப்பிடத்தை ஆசிரியர் சுட்டிக்காட்டுகிறார்...

**வசனம்:** 2 குழந்தைகள் பாலகர் வாயினால் பெலன் உண்டு பண்ணினீர்... இங்கு குழந்தைகள் என்பவர்கள் ஏழை எளியோரை, சாதாரண மக்களை குறிப்பதாகும். இந்த சாதாரண மக்களின் புகழ்ச்சிகள் வலிமையான பாதுகாப்பு அரணாக அமைந்திருப்பதை சுட்டிக்காட்டுகிறது."வலுவற்றவை என உலகம் கருதுபவற்றை" இறைவன் வலுவுள்ளவனவாக மாற்றுகிறார் என்பதை விளக்குகின்றது...

**வசனம்:** 4 மனிதர்... மனிதப் பிறவிகள்... இரண்டு சொற்களுமே இறைமாட்சிக்கு முன் (சங்:8:1) மனிதரது இயலாத தன்மையை, வலிமையின்மையை, ஒன்றுமில்லாமையை குறிப்பதாகும்... அவன் எம்மாத்திரம் என்றேன்....இந்த சொல் இறைவன் மனுக்குலத்திற்கு செய்துள்ள நன்மைகளை விளக்குகின்றன..

***உமக்குச் சற்றே சிறியவர் ஆக்கினீர்...**
***மகிமையினாலும், கனத்தினாளும் முடிசூட்டினீர்...**
***படைப்பின் மேல் அதிகாரம் தந்தீர்...**
இவ்வாறு இறைவனின் மேன்மையைக் குறித்து இந்த சங்கீதம் விளக்குகின்றது...

## சங் 8:7-9 மனிதரின் மாட்சி

வசனம்: 9- எங்கள் ஆண்டவராகிய கர்த்தாவே... இதற்கு "ஏலோகீம்" என்ற எபிரேய சொல் பயன்படுத்தப்படுகிறது. இதற்கு கடவுள், தலைவர், விண்ணவர், அரசர் என்று பொருள் கொடுக்கப்படுகிறது.

...உம்முடைய நாமம் பூமியெங்கும் எவ்வளவு மேன்மையுள்ளதாயிருக்கிறது... இது கடவுளுக்கும் அவர் வழியாக வரும் அரசர்களுக்கும் கொடுக்கும் மகிமை ஆகும். இவற்றை தாம் படைத்த மனிதருக்கு கடவுள் அளிப்பது மனிதரின் உயர்வும், மாண்பும் ஆகும்...

நிறைவாக, இவ்வாறு கடவுள் மனிதருக்கு கொடுக்கும் மாட்சியை குறித்து இந்த சங்கீதம் விளக்குகிறது. இன்றைக்கு நாமும் கடவுளின் மேன்மையை உணர்ந்து மாட்சி பெற அழைக்கப்படுகின்றோம்...

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

ஆண்டவரின் உன்னத பணியில் உங்கள் ஆயர்

*Rev.S.P.Baskar*




சல்மோன் போவாசை இராகாபினிடத்தில் பெற்றான். மத்1:5

Salmon begot Boaz by Rahab. Mat1:5

**முன்னுரை:** இயேசு கிறிஸ்துவின் விடுதலைப் பணியில் செயல்பட்ட பெண்களின் வரிசையில் இராகாப் குறித்து சிந்திக்க அழைக்கப்படுகிறோம். இவர் கடவுளை மிகவும் அதிகமாக நேசித்தவர், கடவுள் மீது அதிக நம்பிக்கை கொண்டவர், கடவுளை அதிகமாக பின்பற்றியவர். எபிரேயர்: 11-ஆம் அதிகாரத்தில் வாசிக்கும்போது விசுவாசிகளின் பட்டியலில் இராகாப் பெயர் முக்கியப் படுத்துவதை காணலாம். கடவுளின் செயல்பாடுகளில் நம்பிக்கை வைத்து, மீட்பின் செயல்பாடுகளில் அதிகமாக ஈடுபட்டவர் இராகாப்பின் வாழ்க்கையை காணும்போது இரண்டு நிலைகளில் நாம் காணமுடியும்....

## சிலை வழிபாடு செய்த இராகாப்...

இவர் சிலை வணக்கம் செய்யக்கூடியவர், யாவேவை வணங்காமல் இருந்தவர்.. சிலை வணக்கம் மரபு சார்ந்து வாழ்ந்தவர். சிலை வணக்கத்தில் அதிகமாக ஈடுபாடுகொண்டு வைராக்கியமாக வாழ்ந்தவர்....

## உண்மைக் கடவுளை வழிபட்ட இராகாப்....

உண்மையான கடவுள் (யாவே) யார் என்பதை குறித்து அறிந்தவுடன் கடவுளை அதிகமாக நேசித்தார், கடவுள் மீது அதிக நம்பிக்கை கொண்டார், கடவுள் மீது அதிக அன்பு கொண்டவராக மாறினார்.....

"ரா" என்னும் சொல்லுக்கு எகிப்தியர் மத்தியில் வாழ்ந்த அமோரியர் மொழிநடையில் கடவுள் என்று பொருள்படும். "இராகாப்" என்னும் முழுப் பெயருக்கு "துடுக்கான மூர்க்க மான்" என்று பொருள் கொள்ளப்படுகின்றது.

**துணிச்சலான இராகாப்....**

இராகாப் கடவுள் மீது நம்பிக்கை வைத்த பின் இவரின் வாழ்வில் துணிச்சல் வந்தது, தைரியம் வந்தது. இவரின் வாழ்வை, உயிரை பணயம் வைத்து யோசுவாவின் ஒற்றர்களுக்கு உதவி செய்கின்றார். (யோசுவா: 2:4)

**கருணையுள்ளம் கொண்ட இராகாப்.....**

இராகாபிடம் காணப்பட்ட மிக சிறப்பான பண்பு ஒற்றர்களை மறைத்து வைத்து அவர்கள் மீது கருணையுள்ளம் கொண்டவராக இருந்தார். அத்துடன் ஒற்றர்களை கயிற்றின் வழியாக தப்ப வைத்த முயற்சி இவரின் துணிச்சலைக் காட்டுகிறது. இவர் உண்மை கடவுள் மீது நம்பிக்கை வைத்தார். எனவே இவர் மட்டுமல்ல இவரை சார்ந்து இருந்த மக்கள் அனைவரும் காப்பாற்றப்பட்டனர். யோசுவாவின் ஒற்றர்களைத் தப்புவிக்க அவர்களைத் தேடி வந்தவர்களை வேறு வழியாக அனுப்பி வைத்தார். இது இவர் ஒரு திறமைசாலி என்பதை அடையாளப்படுத்துகிறது..

அத்துடன் இவருக்கு கிடைத்த பெருமை இவர் இயேசு கிறிஸ்துவின் தலைமுறைப் பட்டியலில் குறிப்பிடப்படுகின்றார். தாவீதின் கொள்ளு பாட்டியான இராகாப் இயேசு கிறிஸ்துவின் மீட்பின் வரலாற்றில் இடம்பெறுவது சிறப்பான ஒன்றாகும்....

இன்றைக்கு நாமும் கடவுளை நேசிக்கின்றவர்களாக, கடவுள் மீது நம்பிக்கை கொண்டவர்களாக, கடவுளை அதிகமாக பின்பற்றுகிறவர்களாக.... வாழ அர்ப்பணிக்க அழைக்கப்படுகிறோம்......

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

இறைப்பணியில் உங்கள் ஆயரம்மா...
**Mrs. E. Nancy Baskar**



Rahab...

Trusting God Enough to More..

# வாழ்க்கையின் தழும்புகள்...




தேவன் நம்மில் வைத்திருக்கிற அன்பை அறிந்து விசுவாசத்திக்கிறோம். தேவன் அன்பாகவே இருக்கிறார், அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான். தேவனும் அவன் நினைத்திருக்கிறார். (1-யோவான் 4:16)

சில வருடங்களுக்கு முன்பு ஃப்ளோரிடா என்ற மாநகரத்தில் ஒரு சிறிய மகன் குளத்தில் சென்று நீந்துவதற்கு பிரயாசப்பட்டான். தன்னுடைய தாயின் சம்மதத்துடன் அருகில் இருந்த குளத்தில் நீந்தி கொண்டிருந்தான். சந்தோஷத்தில் தன்னை நோக்கி ஒரு முதலை வருவதை உணராது குளத்தின் நடு மையம் வரை சென்று விட்டான். அவனை சந்தோஷத்தோடு அனுப்பி வைத்த தாய் தன்னுடைய மகனுக்கு நேரிட போகும் ஆபத்தை; வீட்டின் ஜன்னலின் வழியாக கண்டாள். அதனால் தாய் பதற்றத்தோடு மகனை காக்க ஓடோடி வந்தாள். அவள் மகன் கரையை வந்தடைய தாமதமாகவே; அந்த முதலை அந்த மகனின் காலை கவிற்று. தன் மகனை விட்டுக் கொடுக்க மறுத்த தாய், மகனின் கையை இறுகப் பிடித்துக் கொண்டாள். முதலைக்கும் தாயின் பிடிப்புக்கும் நடுவே அந்த மகன் மாட்டிக்கொண்டான். பின்பு அந்த வழியே சென்ற சில விவசாயிகளின் உதவியால் அந்த மகனை முதலையின் பிடியில் இருந்து காப்பாற்றினர். அந்த சிறுவன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டான். சில மாதங்களுக்கு பின் அவன் சுகம் பெற்ற நிலையில்; ஒரு செய்தியாளர் அந்த சிறுவனின் அனுபவத்தை பகிர்வதற்காக அவரை பேட்டி எடுத்தார். அப்போது அந்த செய்தியாளர் மகனின் தழும்புகளை காணும்படி வேண்டிக் கொண்டார். அப்போது அந்த சிறுவன் பெருமிதத்தோடு எனக்கு முதலையினால் ஏற்பட்ட காலின் தழும்புகளை பார்க்கிலும் என் தாயின் அன்பினால் ஏற்பட்ட கையின் தழும்புகளே ஆழமானது. ஏனென்றால் முதலை என்னை அழிக்க திட்டமிட்ட தழும்புகளை விட, என் தாய் என்னை காப்பாற்ற துடித்ததின் விளைவாய் ஏற்பட்ட தழும்புகளே ஆழமானது.

நம்முடைய வாழ்க்கையில் நிறைய தழும்புகள் உண்டு. ஒரு சில தழும்புகள் நமக்கு மிகுந்த வலியை கொடுத்து நீங்கா துயரம் தரும். ஆனால் ஒரு சில தழும்புகள் நம்மை ஆண்டவர் சாத்தானுக்கு விட்டுக் கொடுக்க மறுத்ததால் வந்த தழும்புகள்.

நம்முடைய எல்லா சூழ்நிலைகளிலும் அவர் நம்மை பற்றி கொண்டிருந்தார். அவர் நம்மை அநாதி சிநேகத்தால் நேசிக்கிறார். நாம் அவரின் பிள்ளைகள். அவர் நம்மை பாதுகாக்கிறார் சில நேரங்களில்; ஆபத்தான சூழ்நிலைகளில் நம்முடைய பாவங்களால் சாத்தானின் கையில் நம்மை ஒப்புக்கொடுத்து விடுகிறோம். அதன் பிறகுதான் நம்முடைய காயத்தின் தழும்புகளால் வேதனைப்படுகிறோம். இன்றைக்கு நாம் எந்தவித கடந்த வாழ்க்கையின் பாவங்களால் கஷ்டப்பட்டாலும், ஆண்டவரின் அன்பான தொடுதலுக்காக; நம்மை ஒப்புக் கொடுப்போம். அவருடைய அன்பே நம் காயங்களை ஆற்றும் மருந்து.

சகோ. டேனியேல் துரைசிங்





# பெரும்பாடுள்ள பெண்ணும் பொறுமையும்

அன்பான சகோதரிகள் அனைவருக்கும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் எனது அன்பின் வாழ்த்துக்கள். மாற்கு 5'ம் அதிகாரத்தில் பெரும்பாடுள்ள பெண் பெற்றுக் கொண்ட அற்புத சுகத்தினை பற்றி நாம் நன்கு அறிவோம். அந்த அற்புதம் வாயிலாக பைபிள் நமக்கு சொல்கின்ற பாடம் என்ன என்பதைப் பற்றி அறிந்து கொள்வோம்.

**மிகுந்த வேதனை உள்ள பெண்:** மாற்கு 5:22-26, "அப்பொழுது 12'வருஷமாய் பெரும்பாடு உள்ள ஒரு ஸ்திரீ, அநேக வைத்தியர்களால் மிகவும் வருத்தப்பட்டு, தனக்கு உண்டானவைகளை எல்லாம் செலவழித்தும், சற்றாகிலும் குணமடையாமல் அதிக வருத்தப்படுகிற பொழுது"

முதலாவது இந்த பெண் மிகுந்த வேதனை நிறைந்த பெண்ணாக இருக்கின்றாள். உதிரப்போக்கு என்பது பெண்களுக்கு மாதாந்திர சுழற்சிதான். ஆயினும் அது அதிக நாள் நீடிப்பது என்பது எப்படிப்பட்ட பயத்தையும், சோர்வையும், வேதனையையும் உண்டாக்கும் என்பது நாம் அறிந்ததே. 12'ஆண்டு காலம் என்பது மிகவும் கொடுமையானது ஆகும். 12'ஆண்டுகளுக்கு முன்பு அவள் அழகாக, புஷ்டியாக இருந்திருக்கலாம். ஆனால் இப்போது அவள் உடல் மெலிந்து எலும்பும் தோலுமாக அவள் தோற்றம் அவளுக்கே பிடிக்காத நிலைதான் இருந்திருக்கக்கூடும். அவள் வேதனை எவ்வளவு கொடிதானதாக இருந்தால், அதற்காக தன் ஆஸ்தி முழுவதையும் அழித்திருப்பாள். அது அவளை மனதளவிலும், உடலளவிலும் மிகவும் பாதித்திருக்கும் என்று நாம் அறிய முடியும்.

**மிகுந்த தைரியம் உள்ள பெண்:** மாற்கு 5:25-26, இரண்டாவதாக இந்தப் பெண் மிகுந்த தைரியம் உள்ள பெண்மணியாக நாம் அறியமுடிகின்றது.

12'ஆண்டுகளாக ஒரு நோயை எதிர்த்து அவர் போராடியதில் இருந்து அவளுக்குள் இருந்த மனதைரியம் வெளிப்படுகிறது. தன் உடலில் நாற்றம், சோர்வு, வலி மற்றும் ஏளனப் பேச்சுகளை குறித்து தளர்ந்து போகாமல் அவள் தைரியமாக எதிர்த்து நின்று இருக்கிறாள் என்பது பாராட்டப்பட வேண்டியதே. நாமாக இருந்தால் சோர்ந்து போயிருப்போம் மற்றும் தவறான முடிவுகளை (நான் இனி பைபிள் படிக்க மாட்டேன், சபைக்கு செல்ல மாட்டேன் என) எடுத்திருக்க கூட வாய்ப்பு உண்டு. அவசர உலகத்தில் அநேகரிடத்தில் பொறுமை நிதானம் என்பது வார்த்தையில் மட்டும் உண்டு, வாழ்க்கையில் இருப்பதில்லை.

**மிகுந்த விசுவாசமுள்ள பெண்:** மாற்கு5:27-28, “இயேசுவைக் குறித்து கேள்விப்பட்டு நான் அவருடைய வஸ்திரங்களையாகிலும் தொட்டால் சொஸ்தமாவேன் என்று சொல்லி ஜன கூட்டத்துக்குள்ளே அவருக்குப் பின்னாக வந்து அவருடைய வஸ்திரத்தை தொட்டாள்.”

அடுத்ததாக, அவளிடம் இருந்து நாம் அறிவது அவள் மிகுந்த விசுவாசமுள்ள பெண்ணாக இருக்கின்றாள். ஆண்டவரை பற்றி அறிந்த உடனே, அவருடைய உடையின் நுனியை தொட்டால் நான் சுகமாகி விடுவேன் என விசுவாசித்தாள். கூட்ட நெரிசலில் அவரின் அருகில் சேர முடியவில்லை, ஆயினும் விடவில்லை, கர்த்தரால் மாத்திரமே தன்னை காப்பாற்ற முடியும் என அவள் விசுவாசித்தாள். அந்த நெருக்கமான கூட்டத்திற்குள் நுழைந்து அவருடைய உடையின் ஓரத்தை தொட்டாள், அதனால் சுகமும் பெற்றாள்.

**மிகுதியான பாராட்டும் சுகமும் பெற்ற பெண்:** மாற்கு 5:29-34 வரை கூறியிருப்பது போல், 12'ஆண்டுகளாக தன்னை அடிமைப்படுத்திய நோயிலிருந்து விடுதலை பெற்றாள்.

அக்கூட்டத்தில் அவ்வளவு பேர் இருந்தபோதிலும் இவள் விசுவாசத்தினால் ஆண்டவரை நெருங்கினாள். அதனால் சமாதானம், விடுதலை, ஆரோக்கியம் மற்றும் பாராட்டும் பெற்றாள். நாமும் ஆண்டவரை விசுவாசத்துடன் கிட்டி சேருவோம். அவர் நம்மை அவருடைய சித்தப்படியே ஆத்தும மற்றும் சரீர நோயிலிருந்து குணப்படுத்துவார் (I-யோவான் 5:14,15).

# உங்கள் உடல் மேல் உங்களுக்கு அக்கறை இருக்கிறதா ?

நமது உடலில் உள்ள முக்கியமான 12'உறுப்புகளில் ஒவ்வொன்றும், 2'மணி நேரம் அதனுடைய உயர் சக்தி ஓட்டத்தின் உச்சத்திலிருக்கும். அப்பொழுது செய்யக்கூடியவை மற்றும் செய்யக்கூடாதவை:-

1. **நுரையீரல்:** (அதிகாலை 3:30'மணி முதல் 5'மணி வரை) நுரையீரல் சுறுசுறுப்பாக இயங்கும் நேரம் இது. இந்த நேரத்தில் எழுவது, உடல் நலத்திற்கு மிகவும் நல்லது. மூச்சுப்பயிற்சி, தியானம் மற்றும் தொழுகை (இறைவனிடம் வேண்டுதல்) செய்ய உகந்த நேரம்.

2. **பெருங்குடல்:** (அதிகாலை 5'மணி முதல் 7'மணி வரை) இந்த நேரத்தில் கண்டிப்பாக எழுந்திருக்க வேண்டும். எழுந்திருப்பவர்களுக்கு மலச்சிக்கல் வராது. குளிர்ந்த நீரில் குளிக்க வேண்டும். இதனால் நரம்புத் தளர்ச்சி ஏற்படாது.

3. **வயிறு:** (காலை 7'மணி முதல் 9'மணி வரை) கண்டிப்பாக காலை உணவை உண்ண வேண்டிய நேரம் இது.

4. **மண்ணீரல்:** (காலை 9'மணி முதல் 11'மணி வரை) சிறிய அளவில் கூட சிற்றுண்டி, குளிர்பானங்கள் அல்லது தண்ணீர் கூட சாப்பிடக்கூடாது. சாப்பிட்டால் மண்ணீரல் பாதிப்பு ஏற்படும். உடலில் உஷ்ணம் அதிகரிக்கும்.

5. **இதயம்:** (நன்பகல் 11'மணி முதல் 1'மணி வரை) கடினமான வேலை ஏதும் செய்யாமல் தண்ணீர் மட்டும் குடித்து உடலை சாந்தப்படுத்தி கொள்ளலாம்.

6. **சிறுகுடல்:** (பிற்பகல் 1'மணி முதல் 3'மணி வரை) மதிய உணவை முடித்து 5 நிமிடங்கள் கண்களை மூடி ஓய்வு எடுக்கலாம், படுத்து உறங்குவதை தவிர்க்க வேண்டும்.

7. **சிறுநீர்:** (பிற்பகல் 3'மணி முதல் 5'மணி வரை) பானங்கள் அல்லது தண்ணீர் அருந்த சரியான நேரம்.

8. **சிறுநீரகம்:** (மாலை 5'மணி முதல் 7'மணி வரை) வழக்கமான வேலையிலிருந்து விடுபட்டு இரவுக்கு முன்பாக வீடு வந்து சேர வேண்டும்.

9. **இதய மேலுறை:** (இரவு 7'மணி முதல் 9'மணி வரை) இந்த நேரத்தில் கண்டிப்பாக இரவு உணவை முடித்திருக்க வேண்டும்.

10. **மூன்று வெப்பமூட்டி** (இரவு 9'மணி முதல் 11'மணி வரை) காலை முதல் மாலை வரை உழைத்து களைத்த உறுப்புகளுக்கு ஓய்வு தர வேண்டும்.

11. **பித்தப்பை:** (நடுநிசி 11'மணி முதல் 1'மணி வரை) கண்மூடி கண்டிப்பாக உறங்கும் நேரம் இது. இந்த நேரத்தில் விழித்திருந்தால் அடுத்த நாள் உங்கள் முழு சக்தியையும் இழக்க நேரிடும்.

12. **கல்லீரல்:** (அதிகாலை 1'மணி முதல் 3'மணி வரை) ஆழ்ந்த நித்திரையில் இருக்க வேண்டும். இந்த நேரத்தில் விழித்திருந்தால் கண்ணின் பார்வை சக்தி குறையும்.

ARTICLE BY: MRS. JAMUNA RANI

# இருக்கிற பெலத்தோடே போ...



**"கர்த்தருடைய தூதனானவர் அவனுக்குத் தரிசனமாகி:**
**பராக்கிரமசாலியே கர்த்தர் உன்னோடே இருக்கிறார் என்றார்"** (நியா 6:12)


இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தார்கள். அப்பொழுது கர்த்தர் அவர்களை ஏழு வருஷம் மீதியானியர் கையில் ஒப்புக்கொடுத்தார். ஆகவே இஸ்ரவேலர் அவர்களுக்குப் பயந்து மலைகளிலும், குகைகளிலும் வாழ்ந்து வந்தார்கள். அதுமாத்திரமல்ல மீதியானியரும் அமலேக்கியரும் திரள்கூட்டமாய் வந்து இஸ்ரவேலரின் தேசத்தை அழித்து விளைச்சல்களையெல்லாம் நாசமாக்கிப்போட்டார்கள். இந்த காலக்கட்டத்தில் மீதியானியருக்குப் பயந்தவனாய் கிதியோன் 'கோதுமையை மீதியானியரின் கைக்குத் தப்புவிக்கிறதற்காக, ஆலைக்குச்சமீபமாய் அதை போரடித்தான். அப்பொழுது கர்த்தருடைய தூதனானவர் அவனுக்குத் தரிசனமானார்.

அந்த நேரத்தில் கிதியோன் தன் நம்பிக்கையற்ற தாழ்வு உணர்வை வெளிப்படுத்தினான். **'ஆ என் ஆண்டவனே, கர்த்தர் எங்களோடே இருந்தால், இவையெல்லாம் எங்களுக்கு நேரிடுவானேன்?**

**கர்த்தர் எங்களை எகிப்திலிருந்து கொண்டு வரவில்லையா? எங்கள் பிதாக்கள் எங்களுக்கு விவரித்துச் சொன்ன அவருடைய அற்புதங்களெல்லாம் எங்கே?** இப்பொழுது கர்த்தர் எங்களைக் கைவிட்டு, மீதியானியரின் கையில் ஒப்புக்கொடுத்தாரே என்றான்.

**பார்த்து: உனக்கு இருக்கிற இந்த பெலத்தோடே போ: நீ இஸ்ரவேலை மீதியானியரின் கைக்கு நீங்கலாக்கி ரட்சிப்பாய்; உன்னை அனுப்புகிறவர் நான் அல்லவா என்றார்'** (நியா 6:14). **கிதியோனுக்கு** மாத்திரமல்ல, உனக்கும் தேவன் அவ்விதமாகவே சொல்லுகிறார். 'என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்கு பெலனுண்டு' என்று பவுலைப் போல சொல்லி நீயும் எப்பொழுதும் எல்லாவற்றிலும் தேவனைச் சார்ந்து செல். தேவன் உன்னை பெலப்படுத்துவார். நாமும் பல நேரங்களில், தற்போதய சூழ்நிலைகளை கண்டு, துவண்டு காணப்படலாம்...

YOUTH FELLOWSHIP ARTICLE




ஆபிரகாம் லிங்கனின் அப்பா ஒரு மரம் வெட்டும் தொழிலாளியாக இருந்தது வந்தார். அவர்கள் காட்டிலெ பல வேளைகளில் வசித்து வந்தனர். லிங்கன் சிறுவனாக இருக்கும் போது எதைக்கண்டும் பயமில்லாதகனாக காணப்பட்டார்.

ஒருநாள் லிங்கன் தன் நண்பர்களுடன் காட்டுக்குள் விளையாடப்போனார். அவர்கள் அடர்ந்த புதர் அண்டை செல்ல வேண்டாம். ஏனெனில் துஷ்ட மிருகங்கள் இருக்கும் என எச்சரித்தனர். ஆனால் ஒன்றுக்கும் பயப்படாத லிங்கன் புதர் அண்டையிலே சென்றார்;. அங்கே ஒரு சத்தம் வருவதை கவனித்த அவர். அந்த சத்தம் என்ன என்பதை பார்த்த வேளையிலே ஒரு பன்றிக்குட்டி காயமுற்று வருத்தத்துடன் உதவிக்காக அழுவதைக் கண்டார். உடனடியாக அதன் மீது இரக்கப்பட்டு கொண்டு வந்து அதற்க்கு காயம் கட்டி ஒரு வாரத்திற்க்குள்ளாக அதை சொஸ்தப்படுத்தினார். நன்றாக ஆனபிறகு அந்த குட்டி காட்டுக்குள் பொக விரும்பாமல் இவருடனே இருக்க விரும்பியது. இவரையே சுற்றி வருமாம் அவர் எக்கு சென்றால்கூட தன்னுடனே எடுததுக்கொண்டு போய் செய்ய வேண்டியதை செய்வாராம்.

இப்படி இரக்க குணமாக காணப்பட்டதால் தான் இவர் எதிர் காலத்தில் அமேரிக்கா நாட்டின் ஜனாதிபதியாக வந்தார். வந்ததுமின்றி அடிமைத்தனத்தையும் ஒழித்தார் எனப்பார்க்கிறோம்.

ஆம் அன்பானவர்களே! பாவம், மரணம், பிசாசின் அடிமைத்தனத்தில் இருந்தும் நம்மை மீட்க்கவே பரலோகதடதின் தேவன் தம் குமாரனாகிய கிறிஸ்துவை மன்னுலக பாவத்திற்க்காக நம்முடைய பாவத்திற்க்காக அனுப்பி தம்முடைய இரக்க குணத்தை வெளிப்படுத்தினார். இதுவே கிறிஸ்துவின் அன்பு.

"அவருடைய இரக்கங்களுக்கு முடிவேயில்லை. (புலம்பல் 3:22)

# Sadhu Sunder Singh

Sunder Singh after the death of his mother, decided to become an evangelist. He had the gift of preaching and the power to attract hundreds of people whenever he spoke, not only in India but also abroad. He had visited Sri Lanka, Burma, the Far East, Europe and Middle East wherever he went people wanted to hear him speak.

In England once when he reached a house and rang the doorbell the maid rushed to her mistress and said in a terrified voice: "Madam, I think Christ has come", sending a child to seek cover under a bed. Such was the charm of the Sadhu, but the West was not for him. Many are the adventures of Sadhu Sunder Singh. Once in the Himalayas he was attacked by a tiger while he was meditating the scriptures. The tiger came right up to his throat but then withdrew suddenly. Similarly, a bear which lost its young tried to jump on him but he whispered a few words: "I know not where thy young ones are my friend go in peace." And the bear left on its own.

The Sadhu himself never insisted on converting anybody but left it to his listeners to take their own decision after hearing him preach. He was constantly reminding people that true inspiration always came in moments of solitude like that time when he was in his teens and praying in an upstairs room in his house at Patiala. Suddenly, there was a bright shining light and he fell on his knees on seeing a figure reminiscent of Christ that he had once seen in a church. The visitant did not speak to him but just raised his hand in blessing and disappeared. After a lot of pain from preaching and travelling Sadhu Sunder Sigh was encouraged by his friends to go to his last sermon to Tibet where he was never seen again.



**Article by Mstr. Joshua**



# திருக்கரத்தால் தாங்கி என்னை..

1997'ம் ஆண்டு நவம்பர் மாதம்

**அந்த பாட்டை மீண்டும் ஒருமுறை பாடுமா..!!!**

என படுத்த படுக்கையாய் மரணத்தை எதிர்நோக்கி தனது வியாதியுடன் போராடிக் கொண்டிருந்த கர்நாடக இசை மேதை டி.ஏ.தனபாண்டியன் தன் மகளிடம் அன்பு கட்டளையிட்டார். பாடல் ஆரம்பமானது தனது இரு கைகளையும் கூப்பி, தேவ சித்தத்திற்கு தன்னை முற்றிலும் அர்ப்பணித்தவராய், இப்பாடலின் வார்த்தைகளையே தன் இறுதி பிரார்த்தனையையாய் இறைவனிடம் சமர்ப்பித்தார். இப்பாடலை பாடுபவர்கள் தங்கள் "**இரு கரங்களையும் உயர்த்தி கூப்பியவாறு பாடவேண்டும்**" என்ற பாடல் ஆசிரியர் டாக்டர் கிளிப்போர்ட் குமாரின் விருப்பம் அவரை அறியாமலேயே அந்நேரத்தில் நிறைவேறிற்று.

தஞ்சை ஆபிரகாம் பண்டிதரின் பேரனும், தமிழக அரசின் கர்நாடக இசை கலைமாமணி சகோதரர் தனபாண்டியன், தஞ்சைப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் தமிழிசை பேராசிரியர். கர்நாடக இசையை கிறிஸ்தவர்களும் முறைப்படி கற்றுத் தேறி இந்திய இசையில் துதிக்க வேண்டும் என்பது அவரது இவ்வுலக வாழ்வின் ஊழிய பாதையின் இறுதி வாஞ்சை. எனவே அதற்கென 3 ஆண்டு கல்வி திட்டத்தை வடிவமைத்து அதில் முதலாமாண்டு இசைப்பயிற்சி நூலை தயாரித்து ஒலி நாடாக்களில் பாடி வெளியிட்டார். மீதமுள்ள ஈராண்டுப் பயிற்சி நூல்களைத் தயாரிக்கும் வேலையில் வியாதி அவரைப் பற்றிக் கொண்டு செயலிழக்க செய்தது. அதை ஆண்டவரின் திருப்பணியாதலால் 6 மாத கால தவணை கேட்டு ஆண்டவரிடம் வேண்டினார். ஆனால் ஆண்டவரின் சித்தம் வேறாக இருந்தது. சோர்ந்து போன நிலையில் இப்பாடலின் வார்த்தைகளும் ராகமும்

தனபாண்டியனின் உள்ளத்திற்கு இதமான ஆறுதல் அளித்தன. இறுதியில் தேவ சித்தத்திற்கு தன்னை முற்றிலுமாக அர்ப்பணித்த அவர், தனது கிறிஸ்தவ விசுவாச பாதையில் மற்றுமொரு உயர்ந்த படியில் வெற்றியுடன் ஏரி, இயேசுவின் திருக்கரத்தில் சேர்ந்தார்.

இவ்வாறு சோர்வுற்ற பற்பல மக்களுக்கு ஆறுதல் அளித்த அர்த்தம் நிறைந்த இப்பாடலின் ஆரம்பம் எப்படி என்று தெரியுமா..?? கேரள மாநிலத்தின் திருவிழாவில் இசை தாலந்து மிகுந்த பீட்டர்-நிர்மலா என்ற இளம் தம்பதியினர் நற்செய்திப் பணிக்கு தங்களை அர்ப்பணித்து இறைப்பணியை இசையுடன் செய்துவந்தனர். அவர்களுடைய பாதையில்தான் எத்தனை போராட்டங்கள்.. கொடிய வறுமை.. அவர்களை வாட்டியது அவர்களின் பச்சிளம் குழந்தைக்கு பால் வாங்க பணமில்லை...

தனது மனைவியின் வாடிய முகத்தை கண்டு பீட்டரின் உள்ளம் தாங்கொண்ணா துயரத்தால் நிறைந்தது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் இசை அரசன் தாவீது பாடிய 30 மற்றும் 57'ம் சங்கீதங்கள் பீட்டரின் நினைவிற்கு வந்தன. யாரிடம் போவோம் ஆண்டவரே..? என்று அவரது உள்ளக் குமுறல்கள் புதியதொரு பாடலாக வெளிவந்தது.. சகோதரர் பீட்டரின் இதயத்தை அவரது வீட்டு முற்றத்தில் அமர்ந்து ரசித்துக் கேட்டுக் கொண்டிருந்தார் அங்கு வந்த தபால் ஊழியர். அவரது உள்ளம் உருகியது; பாடல் முடிந்ததும் இதுவரை தன்னை மறந்து கேட்டுக் கொண்டிருந்த தபால் ஊழியருக்கு தன் வேலையில் நினைவு வர, இப்பாடலை இயற்றி பாடிய பீட்டரிடம் அவருக்கு வந்த கடிதங்களை கொடுத்தார். அதில் ஒன்று அரபு நாட்டில் வேலை செய்து வந்த பீட்டரின் நண்பரிடம் இருந்து வந்திருந்தது. அதை பார்த்த பீட்டர் 10 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையை கண்டு மகிழ்ந்து ஆண்டவருக்கு நன்றி செலுத்தினார்.


இவ்வாறு மலையாள மொழியில் உருவான இப்பாடலை சகோதரன் டாக்டர் கிளிப்போர்டு குமார் 1980'ம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற நற்செய்திக் கூட்டங்களில் பாடுவதற்கு என தமிழில் மொழிபெயர்த்தார். ஆழ்கடலில் பிரச்சினைகளினால் வாழ்க்கை படகு அசையும் போது, நமது ஆத்தும நண்பர் இயேசு நம்மோடு இருக்கிறார் என்ற விசுவாசம் நமக்கு மன அமைதியையும் வெற்றியையும் அளிக்கும் என்று சகோதரர் டாக்டர் கிளிப்போர்டு குமார் தனது அனுபவ சாட்சியை பாடல் மூலம் நம்மிடம் பகிர்ந்துகொள்கிறார். பின்னர் கார் விபத்தில் சிக்கிய போதும், ஊழியப் பாதையில் எதிரிகளால் தாக்கப்பட்ட போதும், இந்த விசுவாச பாடல் அவருக்கு பெலனை கொடுத்தது. நம் வாழ்வில் ஏற்றத்தாழ்வுகள் என்ன நேரிட்டாலும், அவற்றை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டு ஆண்டவரின் திருசித்தத்திற்கு நம்மை முற்றிலும் அர்ப்பணம் செய்ய, இப்பாடல் நம்மை உற்சாகப்படுத்துகிறது.

# INTERMEDIATE






Joel Shino Mathew









Eric Jayden


Shelbino Paul






Jonathan Asher





- Mrs. Olivia Kingston

# Manna Participants JUNE

## Kids Colouring

SMYRNA SYNTYCHE
JESIL BERNICE
HAZEL HARTLYN
REAGAN SHAN
CRASSLIN DEVONA
JANIA PRENI
JOHAN SANJO
CHRIS GABRIEL
JEMIMA ASHNI
JEREMIAH

## Word Search

AJINSHA
SHERINSHA
JOHAN SANJO
JASON ERIC
JEREMIAH
JONATHAN
ROSHAN

## Cross Word

JASON ERIC
JEREMIAH
JONATHAN
ROSHAN

## Bible Quiz

ROSHAN
JOSHUA
JOSHIKA
SHELBINO
JASON ERIC
JONATHAN




ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள்,
அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன்
ஈமெயில் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.

You are encouraged to Complete the tasks given in Manna; and do please send to us; on or before 20th of every month, in the following format.

***Email Subject:*** ***Your name / Quiz type / Month-Year***

***To Church Email: csitcalain@gmail.com***

மன்னாவிற்கான விடைகளை நீங்கள் எழுதி அனுப்பியிருந்தும், பிள்ளைகளின் பெயர் அல்லது உங்கள் பெயர் விடுபட்டிருந்தால் அதற்காக வருந்துகிறோம். தயவுகூர்ந்து உடனடியாக எங்களுக்கு தெரியப்படுத்தவும் அடுத்த மன்னாவில் அதை சரிசெய்து பதிவிட விரும்புகிறோம்.

**YOU CAN ALSO DOWNLOAD OUR MONTHLY MANNA BY VISITING OUR CHURCH WEBSITE**

***http://www.csitamilparishalain.org***

திருச்சபையின் இணையத்தளத்தை பயன்படுத்தி மாதாந்திர மன்னாவை நீங்கள் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

the book of

# ACTS




QUIZ!

## 21 - 28

## அப்போஸ்தலர் நடபடிகள்

JULY'21 QUESTIONS

1. எத்தனை தீர்க்கதரிசனம் சொல்லுகிற கன்னியாஸ்திரிகள் இருந்தார்கள்?

2. பவுலிடத்தில் நீ ரோமனா என்று கேட்டது யார்?

3. இவன் வாயில் அடியுங்கள் என்று கட்டளையிட்டது யார்?

4. பவுலை பார்த்து கர்த்தர் எருசலேமில் என்னைக் குறித்து சாட்சி கொடுப்பது போல் ............................சாட்சி கொடுக்க வேண்டும் என்றார்!

5. துருசில்லாவின் கணவர் பெயர் என்ன?

6. பெஸ்துவை பார்க்கும்படி செசரியாவிற்கு யார்! யார்! வந்தார்கள்?

7. லீசியா நாட்டு மீறப்பட்டணத்ற்கு எந்த நாடுகளின் வழியாக சென்றார்கள்?

8. கப்பலில் புசிக்கும்போது எத்தனை பேர் இருந்தார்கள்?

9. பவுல் யாரை ஜெபம் பண்ணி குணப்படுத்தினார்?

10. மூன்று நாட்கள் எங்கே தங்கினார்கள்?

### மே'மாத விடைகள் / எழுதியவர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. அப்போ 11:11 | 2. அப்போ 12:12 | 3. அப்போ 13:6 | 4. அப்போ 14:25 |
| 5. அப்போ 15:37 | 6. அப்போ 16:14 | 7. அப்போ 17:9 | 8. அப்போ 18:12 |
| | 9. அப்போ 19:22 | 10. அப்போ 20:9 | |

---

திருமதி. ஜோனீஷ் ஹெர்ஷெல், திருமதி. பிப்லின் நெல்சன், திருமதி. பிரிஸ்சில்லா ஜாண்சன், செல்வி. அஜீன்ஷா, செல்வி. ஷெறின்ஷா, செல்வி. ஜோஷிகா வஷினி, திருமதி. ஜமுனா ராணி, திருமதி. ராதிகா செல்வகுமார், திருமதி. ஜெயந்தா ஜாண், திருமதி. பமீலா டேனியல், திருமதி. ஜெனிபர் இம்மாக்குலேட், திருமதி. அகஸ்டா லாரன்ஸ், திருமதி. ரோஸ்லின் பாலாஜி, திருமதி. ஹெப்சிபாய் நேசமணி, திருமதி. ஜெயின் ராஜவேல், திருமதி. அனிதா.எஸ்.ராஜன், செல்வி..ஜெரின் மேக்டலின், திருமதி. ஷெரின் டியென்ஷன்

ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் ஈமெயில் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.
**Your Name / Bible Quiz / June'21** | **Sent to:** csitcalain@gmail.com


# Birthdays of the Month

| | |
|---|---|
| 1-JUL | MR. A.RAVICHANDRAN |
| 4-JUL | MSTR. A. ERIC AARON |
| 5-JUL | MR.P.DAVID RAJ |
| 5-JUL | MRS. JESSY BEULA JOHN JOSEPH |
| 5-JUL | MR. JOSHUVA KOSHY |
| 5-JUL | BABY. ISABELLA JANE |
| 7-JUL | MRS. HEPSI BAI NESAMONY |
| 9-JUL | MRS. GOLDA JENCY STANLY |
| 10-JUL | MSTR. ERIC JAYDEN |
| 11-JUL | BABY. ELIANNA KACY |
| 11-JUL | MSTR. AISHLIN BABU |
| 13-JUL | MRS. PAMELA RACHEL DANIEL |
| 13-JUL | MR. BHASKAR RAJARAM |
| 14-JUL | MR. JASON SAMUEL |
| 15-JUL | MR. SANKARAN CHINNIYAN |
| 19-JUL | MRS. SANGEETHA UJIN RAJ |
| 23-JUL | MR. RAVINDRA |
| 25-JUL | MRS. ANGELIN NALINI |
| 25-JUL | MR. TIMOTHEUS DILL SURESH |
| 26-JUL | MRS. ROSELIN TAMIL SELVI |
| 28-JUL | MRS. BEETA CHRISTOPHER |
| 28-JUL | MR. DAVID SORNABALAN |
| 29-JUL | MR. DENNIS ROGER |
| 29-JUL | MR. MERVIN SAMUEL |
| 29-JUL | BABY. JANIA PRENI |
| 31-JUL | MR. KINGSLY STOOBERT |
| 31-JUL | MRS. BIJI KUMARI.G.S |
| 31-JUL | MRS. SUJATHA MOHANAKUMAR |

# Happy Wedding Anniversary

| | |
|---|---|
| 3 | MR. ASHOK KUMAR & MRS. PHILOMINA |
| 4 | MR. A.S KANNAN & MRS. LAVANYA |
| 5 | MR. SAMAN RAJKUMAR & MRS. CECILIYA |
| 8 | MR. GEORGE ROSE & MRS. ANITHA |
| 12 | MR. DAVID LIVINGSTON & MRS. BEULA RANI |
| 25 | MR. SANKARAN CHINNIYAN & MRS. KALYANI |

July







MRS. SHALY MELBIN
056 394 1817

MR. HERCHIL HARISH
056 252 4659

MRS. PAMELA DANIEL
050 595 1445

| | |
|---|---|
| REGISTRATION: | REGISTER YOUR NAMES TO PARTICIPATE, **NO** REGISTRATION FEES. |
| LANGUAGE: | ENGLISH (NKJV) OR TAMIL ONLY. |
| AGE: | THIS CHALLENGE IS FOR CHILDREN'S UNDER 18 YEARS OF AGE. |
| VERSES: | THE TOTAL PROVERBS IS SET TO 60 VERSES ONLY IT IS ENCOURAGED THAT ALL PARTICIPANTS TRY TO LEARN ALL THIS 60 VERSES. IF NOT... YOU SHALL CHOOSE ANY NO OF PROVERBS WITHIN THIS 60 AND RECITE THEM ON THE FINAL DAY. |
| DAILY VERSE: | STARTING FROM JULY'1ST UNTIL AUG'29TH 2021 - EVERY DAY ONE BIBLE PROVERB WILL BE PUBLISHED CIRCULATED IN PROVERBS CHALLENGE WHATSAPP GROUP. |
| WHATSAPP GROUP: | ALL PARTICIPANTS OR PARTICIPANT'S-PARENT SHOULD JOIN THE GROUP TO GET THE DAILY VERSES AND FOR THE PROGRAM UPDATES (IF ANY). |
| DAILY VERSE HARD COPIES: | IN ADDITION TO WHATSAPP; HARD COPIES OF 60 PROVERBS WILL BE GIVEN TO PARTICIPANTS IN ALAIN, UAE. FOR OTHERS PDF FORMAT SHALL BE CIRCULATED. |
| MEETINGS: | INTRODUCTION SESSION TO PROVERBS CHALLENGE WILL BE HELD ON 28TH JUNE 21 WITH ALL PARTICIPANTS TO EXPLAIN THE PROCEDURES. |
| FINAL DAY: | THE PROVERBS CHALLENGE WILL BE CONDUCTED VIA ONLINE PLATFORM ZOOM) ON (SEPTEMBER 3RD, 2021 AT 2:00 PM UAE TIME. |



# "LORD, OUR LORD, HOW MAJESTIC IS YOUR NAME IN ALL THE EARTH"

EDITOR
THE PRESBYTER - CSI TAMIL PARISH-ALAIN, UAE
POST BOX. 67747 | ALAIN, UNITED ARAB EMIRATES
TEL: +971 (3) 766 8353 | MOB: 056 7668 343
Email: csitcalain@gmail.com
Web: csitamilparishalain.org

STRICTLY FOR INTERNAL CIRCULATION ONLY